## கோயம்பேடு மெட்ரோ ரயில் பணிமனையில்

# 410 கிலோவாட் திறன் கொண்ட சூரிய மின்சார உற்பத்தி கட்டமைப்பு

■ சென்னை

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருத்தில் கொண்டு சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் எரிசக்தி பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறது. அதற்காக மெட்ரோ ரயில் பணிமனை உள்ளிட்ட இடங்களில் சூரியசக்தி மின் உற்பத்தி கட்டமைப்புகளை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. அதன் தொடர்ச்சியாக சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் பணிமனையின் மேற்கூரை,தரைப்பகுதியில் 410 கிலோவாட் திறன் கொண்ட சூரியசக்தி மின்உற்பத்தி கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாதந்தோறும் 55 ஆயிரத்து 350 யூனிட் மின்சாரம் கிடைக்கும். ஆண்டுக்கு 14 லட்சத்து 49 ஆயிரத்து 948 மீதமாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதுவரை மேற்கூரை சூரியசக்தி மின் உற்பத்திக் கட்டமைப்புகள் மூலம் மொத்தம் 2.1 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. மேலும், 5.5 மெகாவாட் மேற்கூரை சூரியசக்தி மின்உற்பத்தி கட்டமைப்பு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணி இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும்.